15

**Minutes of the Public Hearing Meeting held on 07.01.2025 at 11.00 AM in Dr.Siddhar Swamigalin Sri Balamurugan Aalaya Annathaana Mandapam, Opposite to Balamurugan Temple, Koppampatti Village, Kulathur Taluk, Pudukkottai District to establish M/s. K. Nataraj Rough Stone & Gravel Quarry with an extent of 2.86.0 Ha at S.F.Nos. 111/1B, 111/2, 115/9, 115/10 & 40/5 of Themmavur & Killukulavaipatti Village, Kulathur Taluk, Pudukkottai District.**

**Name of the Project:**

M/s. K. Nataraj Rough Stone & Gravel Quarry with an extent of 2.86.0 Ha at S.F.Nos. 111/1B, 111/2, 115/9, 115/10 & 40/5 of Themmavur & Killukulavaipatti Village, Kulathur Taluk, Pudukkottai District.

**List of Officials participated in the meeting:**

1. Thiru. A. Akbar Ali,
   Revenue Divisional Officer,
   Illuppur.

2. Thiru. K. Selvakumar,
   District Environmental Engineer,
   Tamil Nadu Pollution Control Board,
   Pudukkottai District.

3. Thiru. R. Kaviyarasu,
   Tahsildar,
   Kulathur.

4. Thiru. K. Deepan,
   Revenue Inspector,
   Killukkottai.

5. Tmt. R. Baby Rani,
   Block Development Officer,
   Kunnandarkoil Panchayat Union,
   Kunnandarkoil.

6. Thiru. S. Karuththapandiyan,
   Village Administrative Officer (a/c),
   Killukkottai,
   Pudukkottai

7. Thiru. S. Matheswaran,
   Village Administrative Officer,
   Themmavur,
   Pudukkottai.

8. Thiru. A. Marimuthu,
   Special Sub Inspector,
   Udaiyalipatti Police Station,
   Pudukkottai.

9. Thiru. M. Venkada Subramanian,
   Assistant Engineer,
   Tamil Nadu Pollution Control Board,
   Pudukkottai District.

10. Thiru. D. Arunkumar,
    Assistant Engineer,
    Tamil Nadu Pollution Control Board,
    Pudukkottai District.

**List of Participants related to the project:**

1. Thiru. Gobinath,
   Senior Environmental Engineer,
   Eco Tech Labs Private Limited,
   Chennai.

In the public hearing, 91 persons were participated, including Government Officers, Project proponents and the general public. (Enclosed video Annexure-A).

## Welcome note given by District Environmental Engineer:

The District Environmental Engineer, Tamil Nadu, Pollution Control Board, Pudukkottai District has welcomed the Revenue Divisional Officer, Illuppur who presided over the function. He welcomed the Tahsildar, Kulathur, other revenue officials and other Government officials. He also welcomed the Proprietor of M/s. M/s. K. Nataraj Rough Stone & Gravel Quarry, Project Proponent, Press, NGOs and general public who were attended the Public Hearing meeting.

He also informed that as per Ministry of Environment & Forest, New Delhi vide EIA Notification dated 14.09.2006, certain type of projects, public opinion has to be obtained before the issue of Environment Clearance. He added that the public notice informing the conducting of public hearing was published in The Dinathanthi & The Times of India on 30.11.2024. This public hearing was conducted for M/s. K. Nataraj Rough Stone & Gravel Quarry with an extent of 2.86.0 Ha at S.F.Nos. 111/1B, 111/2, 115/9, 115/10 & 40/5 of Themmavur & Killukulavaipatti Village, Kulathur Taluk, Pudukkottai District to obtain the views of public.

He also informed that the views of public would be recorded and it would be forwarded to the State Environment Impact Assessment Authority, Chennai after getting approval from the District Collector, Pudukkottai.

District Environmental Engineer informed that M/s. K. Nataraj Rough Stone & Gravel Quarry project proponent would explain about the project after that the public could give their opinion either verbally or in writing about the project.

## Revenue Divisional Officer, Illuppur:

He welcomed the gathering and informed that the Project Proponent would explain about their proposed project outlay and Environmental Impact Assessment study carried out through Power Point Presentation.

## Power Point Presentation by the Project Proponent:

Thiru. Gobinath, Senior Environmental Engineer, Eco Tech Labs Private Limited, Chennai of M/s. K. Nataraj Rough Stone & Gravel Quarry has explained about the details of the project outlay, Environmental Impact Assessment report and

Environmental Management Plan through Power Point Presentation. (Copy of the detail is enclosed in Annexure -B).

**District Environmental Engineer:**

The District Environmental Engineer requested the public to register their views on this project either verbally or in writing by giving their name and village details.

Followed by this, Public Hearing process started.

**1. Thiru. Veerasingam, Ex Panchayat President, Koppampatti**

He introduced himself as Veerasingham, Former Panchayat President, Koppampatti. He informed that the quarries have been operating in Koppampatti village for about 35 years. Due to this, the livelihood of the people is improving. He registered his support opinion by stating that he has no objections to granting permission for the quarry.

**2. Thiru. Aandar, Koppampatti**

He started his speech by introducing himself as Aandar from Koppampatti. He said that the quarries were in operation for about 40 to 50 years. Generally, there is pollution here. The dust, smoke affects the children. The water here is polluted and the flow of the water decreased. He added that please see his house, the clay roof tiles of his house are damaged and his house was damaged. He added that the temple, the school are damaged. There is no path to the temple, public transport and agrilands. Everything is affected here. Nothing is true here. He said that no quarry is needed for Koppampatti whether it is in government land or patta land. He also added that it is very disruptive. It affects the transportation. The cattles cannot go and come. We cannot go to the agrilands. Everything is blocked. He informed that people here are in great distress. Generally, it might look good but there is no need of quarry. He added that there is no need whatever type of quarry in Koppampatti. He asked that to look at his built house and it seems many cracks. It may fell at anytime. He told that he live in that situation. He also said that he protested many times and conducted road roko agitation for against the quarry five times and filed a case but no action has been taken so far. He registered his objection opinion against the project.

**3. Thiru. Manikandan, Koppampatti**

He started his speech by greeting everyone who came to public hearing meeting. He said that his name is Manikandan. He added that the quarries were operating there for past 30 to 35 years. But the people are not achieve any development. He also said that the cattles were very much affected and the water was polluted. He informed that for about 15, 20 years there was employment to people. The people were employed and they earned from it. But now, they bought machineries so the people could not earn. He added that people went to other towns in search of jobs. If they went in the beginning by now they would have made on their own way for living. Today, less employment opportunities for here. He said that only four or five people get income and he appears that others are not get income. All are going on the way of drinking water pond and had no maintenance and no one can do anything. People are suffering from water scarcity. He told that he has a concern about people getting benefits from quarries by breaking stones. He does not want any quarries use machineries. He added that if you want quarry, make people come and break the stones in the quarries and they would earn, that is my concern. He thanked and registered his opinion about the project.

**4. Thiru. Muruganandam, Koppampatti**

He introduced himself as Muruganandam from Koppampatti. He said that he drives a compressor vehicle so that he wanted a quarry and registered his support opinion for the project.

**5. Thiru. Poopandian, Koppampatti**

He started his speech by saying that there was no benefit to this village from the stone quarry. It is well known to the government officials who came here. He stated that permission given to the all government stone quarries operating in the patta land. He gave petitions many times and did many things. He added that the officials know all that, but there was no action. But for this, public hearing is conducted and he welcomed the officials. He stated that it seems that one part of the village was destroyed and no one goes that area. This area became dangerous. He asked whether the officials visit the site. He further said that people are saying that the officials are become here but he don't know about it. He said that a Karuppar temple is located to the northern side of the village, but it has no road facilities. The

people visiting temple by cars and two wheelers are going through agricultural land. They cannot be stopped by fighting with them. He asked for a solution to this issue. He requested that it will be good if solution is provided. He added that there is a drinking water pond located from which the village and the neighboring village took water from the pond for drinking purpose. The dust fell into the pond. The soil from the stone quarry is dumped along the edge of the pond and that soil collapses and fell inside into the pond. Further he said that the people present here are not questioning them because of fear. That many people came here for asking, and speaking but no one has the courage to ask it. He added that little thinking in the mind that there is no benefit to the village. It may be 35 or 40 years we didn't know exactly but there is no good thing happened to this village. He told that many peoples are suffering from kidney damage in the area but if we travel 5 or 6 km even 90, 95 aged people are there. But in this village people of age 40, 50 are died and many people are doing dialysis. They are taking medicines but no one was cured. He questioned how the people living around 2 to 3 km from this village only were affected. No one knows about it and government officials were not looking into it. He added that the Panchayat president, the Ex-Panchayat president was not asking about this and they does not know anything about this. He thanked and registered his opposite opinion about the project.

**6. Tmt. Mahalakshmi, Koppampatti**

She introduced herself as Mahalakshmi from Koppampatti. She said that she is the wife of Ex- Panchayat president. She is operating a rough stone quarry and given jobs to 10 to 15 people and not without giving work. She added that the opinion of other people saying that machineries become is correct. The other people who opposed machineries, have operating rough stone quarry through self-help groups. She asked how she will survive. She said that they have given works to atleast ten people when they were operate quarry. So she needs the quarry and having no agricultural lands. She told that village depends on this quarry for their living. The compressor, tractor vehicle owners depends on this quarry. She added that everyone is doing this business. They are saying their opinion and we are saying our opinion. She registered her support opinion for the project.

21

**7. Tmt. Kavita, Koppampatti**

She introduced herself as Kavita from Koppampatti. She informed that she was survived by breaking stones in the quarry. She make all children to study. She added that they have built temples in their villages and chariots were operated. They did everything from the quarry. They helped many children and schools. She said that they want to educate their children and she must need quarry. She registered her support opinion for the project.

**8. Tmt. Chinnathal, Koppampatti**

She introduced herself as Chinnathal from Koppampatti. She stated that she was survived by breaking stones so far. They all worked in the quarry. Now only they used machineries to break the rocks. She added that, she requested quarry at present. Only if she worked in quarry and she can able to educate her all childrens and then only she can look after herself. She registered her support for the project.

**9. Tmt. Amuda, Koppampatti**

She introduced herself as Amuda from Koppampatti. She informed that she need quarry. She rely on quarry for educating all their children. She said that her husband went to other town for job since there was no job here. Further she added that if quarry is operated in this area and her husband will work here. She registered her support opinion that they need stone quarry.

**10. Tmt. Pandi Meena, Koppampatti**

She introduced herself as Pandi Meena from Koppampatti. She said that since her childhood, her father was working in a quarry. Now, she educated by her father and also, he will look after her brother's studies. She registered her support for the project by saying that they need stone quarry.

**11. Thiru. Balaiya, Koppampatti**

He started his speech by saying his name is Balaiya from Koppampatti. He is driver. He said that he can earn only when the quarry is operated. House can be built only if there is Jelly. Even if government has given the house, how can one built it without stone jelly, he questioned. He cannot buy jelly from outside. He registered his support opinion that he want quarry.

**12. Thiru. Murugesan, Koppampatti**

He introduced himself as Murugesan from Koppampatti. He stated that the quarries should not use machineries for breaking stones instead people should be employed for breaking stones like old days. The Karuppar koil has no path. They cannot do agriculture since there is no path. He asked them to rectify these. Further he added that the permission can be given to quarry only if they give work to people like old days to break the stones by manual for their people can make a living out of it livelihood. He registered his opinion for the project.

**13. Thiru. Arivazhagan, Koppampatti**

He started his speech by saying that his name is Arivazhagan from Koppampatti. He said that he had no objection for giving permission to Thiru.Sasikumar and Thiru.Natraj stone quarry. He stated that he worked as a labour for about 10 to 15 years. Now he owns 10 to 12 lorries and these lorry drivers belongs to the local village. He said that about 15 families depends on him for a living and also he depends on them. He added that all environment is good and there is no problems. He said that if local quarries are operated then only quarried stones will be prosperous can be easily transported. Further he added that we have crushers and quarries and without getting any benefits from these and no benefits for long way for going to Pudukkottai or Viaralimalai. He registered his support opinion by saying that he has no objection to operate the quarries and requested to grant permission to both stone quarries.

**14. Thiru. Govindaswamy, Koppampatti**

He introduced himself as Govindaswamy from Koppampatti. He stated that he has no objection to operate the stone quarry. He added that only if the quarry is operated many people will get job and will grow. The village will also develop and he registered his support opinion for the project.

**15. Thiru. Prabhu, Poochikudivayal**

He started his speech by saying his name is Prabhu from Poochikudivayal. He informed that he was a JCB operator. There are 20 to 30 persons working as JCB, Hittachi operators along with him. Also many people from nearby villages and Koppampatti village were working in the crusher. Almost 50 to 100 persons were working. He added that they will get job only if stone quarry is operated. He

registered his support by saying that to grant permission for the stone quarry.

**16. Thiru. Prabhakaran, Koppampatti**

He informed that his name is Prabhakaran from Koppampatti. He is working as a manager in a crusher. He told that his father worked in a crusher and he studied by his father and now he was also working in a crusher. The people in the village making a living by using many stone quarries. He registered his support opinion by stating that we need stone quarry in this area.

**17. Thiru. Veerakumar, Koppampatti**

He introduced himself as Veerakumar from Koppampatti. He stated that he working as a operator in a crusher. He said that he was jobless for two years, since the crusher is not operating. He borrows money from outside on interest and manages with it as his stage. He added that only if stone quarry is permitted, he will manage his family. He further stated that he do not have a single rupee, definitely we need stone quarry. Everybody was good earning from stone quarries. Everything was going good. He added that definitely we need stone quarry. He can manage his family only if stone quarry is operating and registered his support for this project.

**18. Thiru. Kamaraj, Koppampatti**

He introduced himself Kamaraj from Koppampatti. He informed that the stone quarries were operating well for about 35 years in this village. Now, for about four or five years, the quarries were not operating well. He added that before 25 years ago people called Koppampatti as Singapore. People got employment to that extent. He told that only people were employed for loading & unloading of jellys and breaking rocks. He added that his opinion is to reduce the work of machines to break rocks and request to give more employment to the people to break the rock directly. He registered his support opinion by saying that he has no objection to operate the quarry.

**Revenue Divisional Officer, Illuppur:**

After that, the Revenue Divisional Officer, Illuppur said that if any public has to say any comments / opinion, they can inform. Then he said that the public hearing meeting was closed as no one from the public came forwarded to say their opinion.

**Vote of Thanks:**

The District Environmental Engineer has informed that the public could submit their comments in writing at the office of the District Collector or the Tamil Nadu Pollution Control Board, Pudukkottai office. The District Environmental Engineer thanked the Revenue Divisional Officer, Illuppur for presiding over the Public hearing meeting and the other Government Officials for attending the meeting and also he thanked the Proprietors of the stone quarries, Workers, Project Proponent, NGOs, Press reporters, Police officials, social activists and general public who were participated in the Public Hearing Meeting.

The meeting came to an end

Encl.:

1. Attendance sheet of the participants(A)
2. Project Proponent's power point presentation(B)
3. Video(CD) of the Public Hearing (C)
4. Draft of Environmental Impact Assessment Report and Executive Summary in Tamil and English (D)
5. Written Petition (E) - 14 Nos.

8/1/25

**District Environmental Engineer,**
**Tamil Nadu Pollution Control Board,**
**Pudukkottai.**

8/1/25

**Revenue Divisional Officer,**
**Illuppur.**

**புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் வட்டம், கொப்பம்பட்டி கிராமம், பாலமுருகன் ஆலய எதிர்புறம், Dr.சித்தர் சுவாமிகளின் ஸ்ரீ பாலமுருகன் ஆலய அன்னதான மண்டபத்தில் 07.01.2025 அன்று மதியம் 11.00 மணியளவில் நடைபெற்ற தி/ள். கி.நடராஜ் உடைக்கல் மற்றும் கிராவல் குவாரி, விஸ்தீரணம் - 2.86.0 ஹெக்டர், புல எண். 111/1B, 111/2, 115/9, 115/10 தெம்மாவூர் கிராமம் மற்றும் 40/5, கிள்ளுக்குளவாய்ப்பட்டி கிராமம், குளத்தூர் வட்டம், புதுக்கோட்டை மாவட்டத்தில் நிறுவிடவும், இயக்கிடவும் உத்தேசித்துள்ளது. இத்திட்டத்திற்கான பொதுமக்கள் கருத்துக் கேட்டுணரும் கூட்டத்தின் நடவடிக்கைக் குறிப்புகள்.**

**திட்டத்தின் பெயர்** :

தி/ள். கி. நடராஜ் உடைக்கல் மற்றும் கிராவல் குவாரி, விஸ்தீரணம் - 2.86.0 ஹெக்டர், புல எண். 111/1B, 111/2, 115/9, 115/10 தெம்மாவூர் கிராமம் மற்றும் 40/5, கிள்ளுக்குளவாய்ப்பட்டி கிராமம், குளத்தூர் வட்டம், புதுக்கோட்டை மாவட்டம்.

**கூட்டத்தில் பங்கேற்ற அலுவலர்கள்:**

1. திரு. அ. அக்பர் அலி,
   வருவாய் கோட்டாட்சியர்,
   இலுப்பூர்.

2. திரு. கு. செல்வகுமார்,
   மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,
   தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
   புதுக்கோட்டை மாவட்டம்.

3. திரு. R. கவியரசு
   வட்டாட்சியர்,
   குளத்தூர்.

4. திரு. க. தீபன்,
   வருவாய் ஆய்வாளர்,
   கிள்ளுக்கோட்டை.

5. திருமதி. ரா. பேபி ராணி,
   வட்டார வளர்ச்சி அலுவலர்,
   குன்றாண்டார்கோயில் ஊராட்சி ஒன்றியம்,
   குன்றாண்டார்கோயில், புதுக்கோட்டை.

6. திரு. சு. கருத்தப்பாண்டியன்,
   கிராம நிர்வாக அலுவலர் (கூ.பொ),
   கிள்ளுக்கோட்டை,
   புதுக்கோட்டை.

7. திரு. S. மாதேஸ்வரன்,
   கிராம நிர்வாக அலுவலர்,
   தெம்மாவூர் வட்டம்,
   புதுக்கோட்டை.

8. திரு. A. மாரிமுத்து,
   காவல் சிறப்பு உதவி ஆய்வாளர்,
   உடையாளிப்பட்டி காவல் நிலையம்,
   உடையாளிப்பட்டி,
   புதுக்கோட்டை.

9. திரு. மு. வெங்கடசுப்ரமணியன்,
   உதவி பொறியாளர்,
   தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
   புதுக்கோட்டை மாவட்டம்.

10. திரு. து. அருண்குமார்,
   உதவி பொறியாளர்,
   தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
   புதுக்கோட்டை மாவட்டம்.

**திட்டம் சம்பந்தப்பட்ட பங்கேற்பாளர்கள் :**

1. திரு. கோபிநாத்,
   முதுநிலை சுற்றுசூழல் பொறியாளர்,
   ஈக்கோ டெக் லேப்ஸ் பிரைவேட் லிமிடெட்,
   சென்னை.

**அரசு அலுவலர்கள், திட்ட முனைவோர் மற்றும் பொதுமக்கள் உட்பட மொத்தம் 91 நபர்கள் பங்கேற்றனர்.** (இணைப்பு – 'அ' வாயிலாக பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது).

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், புதுக்கோட்டை அவர்கள் கீழ்க்கண்டவாறு வரவேற்புரை ஆற்றினார்கள்:**

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், புதுக்கோட்டை மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்கள் பொதுமக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டத்திற்கு வருகை புரிந்து தலைமை தாங்க வந்திருக்கும் வருவாய் கோட்டாட்சியர், இலுப்பூர் அவர்கள் மற்றும் இக்கூட்டத்தில் பங்குபெற்ற வட்டாட்சியர், குளத்தூர் வட்டம், மற்ற வருவாய் துறை அதிகாரிகள், காவல்துறை அதிகாரிகள், தி/ள். கி. நடராஜ் உடைக்கல் மற்றும் கிராவல் குவாரி நிறுவன உரிமையாளர், திட்ட பிரதிநிதிகள், பணியாளர்கள், சமூக ஆர்வலர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

பின்னர், மத்திய சுற்றுச்சூழல், வனத்துறை மற்றும் பருவநிலை மாற்றத்திற்கான அமைச்சகத்தின் 14.09.2006 அன்று வெளியிடப்பட்ட சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிவிக்கையின்படி, சிலவகைத் திட்டங்களுக்கு சுற்றுச்சூழல் அனுமதி வழங்குவதற்கு முன் பொதுமக்கள் கருத்துக் கேட்டுணரும் கூட்டம் நடத்தப்பட்டு பொதுமக்களின் கருத்துக்களைப் பெறுவது அவசியமாகிறது. இது தொடர்பாக தினத்தந்தி மற்றும் தி டைம்ஸ் ஆப் இந்தியா நாளிதழ்களில் 30.11.2024 அன்று பொது அறிவிப்பு வெளியிடப்பட்டு இருந்ததை சுட்டிக்காட்டினார். இன்று நடைபெறும் பொதுமக்கள் கருத்துக் கேட்டுணரும் கூட்டம் தி/ள். கி. நடராஜ் உடைக்கல் மற்றும் கிராவல் குவாரி என்ற நிறுவனம் புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் வட்டம், கிள்ளுக்குளவாய்ப்பட்டி கிராமம், புல எண். 111/1B, 111/2, 115/9, 115/10 தெம்மாவூர் கிராமம் மற்றும் 40/5 ஆகியவற்றில் 2.86.0 ஹெக்டேர் விஸ்தீரணத்தில் கல்குவாரி நிறுவிடவும், இயக்கிடவும் உத்தேசித்துள்ளது. உத்தேசிக்கப்பட்டுள்ள திட்டம் குறித்து பொதுமக்களின் கருத்துக்களைக் கேட்டுப் பெறுவதற்காக இக்கூட்டம் நடத்தப்படுகிறது என தெரிவித்தார்.

மேலும், பொதுமக்கள் தெரிவிக்கும் கருத்துக்கள் இங்கு பதிவு செய்யப்பட்டு, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் ஒப்புதலுக்குப்பின் மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம், சென்னை அவர்களுக்கு அனுப்பி வைக்கப்படும் என மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் தெரிவித்துக் கொண்டார்.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்கள், தி/ள். கி. நடராஜ் உடைக்கல் மற்றும் கிராவல் குவாரி நிறுவனத்தின் பிரதிநிதிகள் இந்த உத்தேசிக்கப்பட்டுள்ள திட்டம் பற்றி விவரித்தபின், பொதுமக்கள் தங்களது கருத்துக்களை வாய்மொழியாகவோ, எழுத்து மூலமாகவோ தெரிவிக்கலாம் என்று கூறினார்.

**வருவாய் கோட்டாட்சியர், இலுப்பூர்:**

வருவாய் கோட்டாட்சியர், இலுப்பூர் அவர்கள் அனைவரையும் வரவேற்று பொதுமக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டத்தை தொடங்கி வைத்து இத்திட்டப் பிரதிநிதிகளைத் திட்டம் குறித்து விவரிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

**திட்டப் பிரதிநிதி:**

திரு. கோபிநாத், முதுநிலை சுற்றுசூழல் பொறியாளர், ஈக்கோ டெக் லேப்ஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை அவர்கள் தி/ள். கி. நடராஜ் உடைக்கல் மற்றும் கிராவல் குவாரி சார்பாக இத்திட்டம் குறித்தான விவரங்கள் வரைவு மற்றும் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு சம்பந்தமான விவரங்களை நிழற்படம் (Power Point Presentation) மூலம் விரிவாக இக்கருத்து கேட்பு கூட்டத்தில் எடுத்துரைத்தார். இதன் விபரம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது (இணைப்பு – 'ஆ')

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்:**

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்கள் பொதுமக்கள் தங்கள் பெயர் மற்றும் ஊர் விபரம் என்பதை தெரிவித்து அதன் பின்பு தங்களது கருத்துக்களை வாய்மொழியாகவோ, எழுத்துவடிவிலோ பதிவு செய்யுமாறு கேட்டுக்கொண்டார்.

**பொதுமக்கள் கருத்து கேட்பு:**

**1. திரு. வீரசிங்கம், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர், கொப்பம்பட்டி**

என் பெயர் வீரசிங்கம், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர், கொப்பம்பட்டி. கொப்பம்பட்டி கிராமத்தில் சுமார் 35 ஆண்டுகளாக கல்குவாரிகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. இதனால் மக்களின் வாழ்வாதாரம் மேம்படுகிறது. கல்குவாரிக்கு அனுமதி கொடுப்பதினால் எந்த விதமான ஆட்சேபனைகளும் இல்லை என்று பதிவு செய்கிறேன் என்று கூறி தனது ஆதரவு கருத்தினை பதிவு செய்தார்

**2. திரு. ஆண்டார், கொப்பம்பட்டி**

என் பெயர் ஆண்டார் கொப்பம்பட்டி. இங்கு சுமார் 40, 50 ஆண்டு காலமாக கல்குவாரி இயங்கிக்கொண்டு இருக்கிறது. இங்கு பொதுவாகவே மாசுபடுகிறது, தூசி புகை வருகிறது. இவை குழந்தைகளை பாதிக்கின்றது. இங்கு தண்ணீர் மாசுபடுகிறது, நீரோட்டம் குறைந்துவிட்டது, வீடுகள் இடிந்து விட்டது, என் வீட்டை வந்து பாருங்கள் ஓடுகள் எல்லாம் உடைந்து இருக்கிறது. கோவில் இடிகிறது, பள்ளிக்கூடம் இடிகிறது, போக்குவரத்துக்கு பாதை இல்லை, கொள்ளைக்கு செல்ல பாதை இல்லை, கோவிலுக்கு செல்ல பாதை இல்லை, வயலுக்கு செல்ல பாதை இல்லை. இங்கு

எல்லாம் பாதிக்கபட்டு இருக்கிறது. இங்கு எதுவுமே உண்மை கிடையாது. ஆகையினால் கொப்பம்பட்டிக்கு அரசு புறம்போக்கு கல்குவாரியாக இருந்தாலும், பட்டா இடம் என்றாலும் கல்குவாரி வேண்டாம். கொப்பம்பட்டிக்கு கல்குவாரி தேவையில்லை. மிகவும் இடையூறாக இருக்கிறது. போக்குவரத்துக்கு பாதிப்பாக இருக்கிறது. ஆடு, மாடு சென்றுவர முடியவில்லை. காட்டுக்கு போகவும் முடியவில்லை. அனைத்தும் தடைப்பட்டு இருக்கிறது. மக்கள் மிகுந்த அவதியில் இருக்கின்றோம். இதை பார்ப்பதற்கு தான் நன்றாக இருக்கிறது. நான் பொதுவாக கூறுகிறேன் கல்குவாரி வேண்டாம். எந்த கல்குவாரியாக இருந்தாலும் கொப்பம்பட்டிக்கு வேண்டாம். நான் கஷ்டப்பட்டு கட்டிய வீட்டை பாருங்கள் எல்லாம் வெடிப்பு வந்துவிட்டது. எப்பொழுது இடிந்து விழும் என்று தெரியாது. அந்த நிலைமையில் நான் இருக்கின்றேன். நாங்கள் பல முறை போராட்டம் செய்திருக்கிறோம். ஐந்து முறை சாலை மறியல் செய்திருக்கிறோம், வழக்கு கொடுத்திருக்கிறோம் எந்தவிதமான நடவடிக்கையும் இதுவரை எடுக்கவில்லை. நன்றி வணக்கம் எனக் கூறி தனது எதிர்ப்பு கருத்தினை பதிவு செய்தார்.

**3. திரு. மணிகண்டன், கொப்பம்பட்டி**

இப்பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வந்திருப்பவர்கள் அனைவருக்கும் வணக்கம் கூறி தனது பெயர் மணிகண்டன் என்றார். இங்கு கடந்து முப்பது, முப்பத்தைந்து ஆண்டு காலமாக கல்குவாரி இயங்கி கொண்டு தான் இருக்கிறது. இன்று வரை மக்கள் மேம்பாடு அடையவில்லை. இதில் கால்நடைகள் மிகவும் பாதிப்படைகிறது. இங்கு தண்ணீர் மிகவும் மாசடைந்து கொண்டிருக்கிறது ஒரு 15, 20 ஆண்டுகள் மக்களுக்கு வேலைவாய்ப்பு இருந்தது. மக்களை கொண்டு செய்து மக்களுக்கு வருமானம் தருவதாக இருந்தது. இப்பொழுது எல்லாம் இயந்திரங்களை வாங்கி விட்டார்கள் அதனால் மக்களுக்கும் எந்தவித வருமானம் கிடையாது. மக்கள் வெளியூருக்கு வேலை தேடி போகிறார்கள். ஆரம்பத்திலேயே வெளியூருக்கு சென்று இருந்தால் கூட அவரவர்கள் ஒவ்வொரு பிழைப்பை நம்பி இருந்திருப்பார்கள். இன்று அந்த அளவுக்கு யாருக்கும் பிழைப்பு இல்லாமல் இருக்கிறார்கள். இங்குள்ள நான்கு, ஐந்து பேர்கள் அவர்களுக்கு மட்டும் வருமானம் கிடைக்கிறது. மற்றவர்களுக்கு எந்த வருமானமும் இல்லாமல் இருப்பது போல் தோன்றி கொண்டிருக்கிறது. அந்த குடிநீர் குளம் வழியாக தான் செல்கிறார்கள். ஆனால், அந்த குடிநீர் குளத்திற்கு ஒரு சரியான பராமரிப்பு இல்லை, யாருமே எதுவும் செய்ய முடியவில்லை. மக்கள் குடிநீர் பற்றாக்குறையால் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அதைவிட என்னுடைய ஆதங்கம் என்னவென்றால் கல்குவாரியில் முறையாக மக்கள் உடைத்து மக்கள் பயன்பெறுவது போல் இருந்தால் பரவாயில்லை. இயந்திரங்களைக் கொண்டு உடைக்க கூடிய எந்த

கல்குவாரியும் எனக்கு வேண்டாம். வேண்டுமென்றால் மக்கள் வந்து கல்குவாரியில் கல் உடைத்து மக்களே அள்ளி மக்களே சம்பாதிக்கும் படி செய்து விடுங்கள் அது என்னுடைய ஆதங்கம் நன்றி எனக் கூறி தனது கருத்தினை பதிவு செய்தார்.

**4. திரு. முருகானந்தம், கொப்பம்பட்டி**

என்னுடைய பெயர் முருகானந்தம், கொப்பம்பட்டி. நான் கம்பரசர் வண்டி ஓட்டிக் கொண்டிருக்கிறேன். அதனால் எனக்கு கல்குவாரி வேண்டும் எனக் கூறி தனது ஆதரவு கருத்தினை பதிவு செய்தார்.

**5. திரு. பூபாண்டியன், கொப்பம்பட்டி**

இந்த கல்குவாரி இருப்பதால் இந்த கிராமத்துக்கு எந்த நன்மையும் இல்லை இந்த மக்களுக்கும் எந்த நன்மையும் இல்லை. இது இங்கு வந்திருக்கின்ற அரசு அதிகாரி அவர்களுக்கும் நன்றாகவே தெரியும். தயவுசெய்து இதுபோல பட்டா இருக்கும் வரைக்கும் தான் கொடுக்கின்றோம் என சொல்லி அரசு கல்குவாரி அனைத்தையும் அனுமதி கொடுத்துவிடுவீர்கள். எவ்வளவோ முறை மனு கொடுத்திருக்கோம் எவ்வளவோ செய்து இருக்கிறோம். அதெல்லாம் உங்களுக்கு தெரியும் அதில் எந்த நடவடிக்கையும் இல்லை ஆனால் இதற்கு மட்டும் கருத்து கேட்பு கூட்டம் வைத்து வந்திருக்கிறீர்கள் பரவாயில்லை வந்த வரைக்கும் உங்களை எங்கள் ஊருக்கு வரவேற்கிறோம். அதே போல் ஒரு பகுதியே அழிந்து போனது போல உள்ளது. அந்த பகுதியே யாரும் போக முடியாத படி உள்ளது. அது மிகவும் ஆபத்தான பகுதியாக மாறிவிட்டது. நீங்கள் அனைவரும் அங்கு வந்து பார்வை இடுகிறீர்களா என்னவென்று எங்களுக்கு தெரியவில்லை. நீங்கள் வருவதாக தான் சொல்கிறார்கள். ஆனால் எங்களுக்கு தெரியவில்லை. எங்கள் ஊருக்கு வடக்கு புறமாக கருப்பர் கோவில் இருக்கிறது. அதுக்கு சாலை வசதி கிடையாது. வழி கிடையாது. விவசாய நிலங்களில் தான் கார் மற்றும் வண்டியில் செல்கிறார்கள். அவர்கள் சாமி கும்பிட செல்கிறார்கள். அவர்களை நாம் சண்டையிட்டு தடுக்கவும் முடியாது. அதற்கான வழிமுறைகள் எல்லாம் கொஞ்சம் செய்து தாருங்கள். மக்களுக்காக கொஞ்சம் அதை செய்து கொடுங்கள். அப்படி செய்து கொடுத்தீர்கள் என்றால் நன்றாக இருக்கும் என்று கூறினார். அந்த குடிநீர் குளத்தில் இன்னைக்கு இந்த கிராமமே குடிக்கிறார்கள். சுற்றுவட்டாரத்தில் உள்ள மற்ற கிராமங்களும் அதில் தண்ணீர் எடுத்துக் கொண்டு போய் குடிக்கிறார்கள். அதில் தான் எல்லா தூசுகளும் விழுகின்றது. கல்குவாரி மண்ணை நோண்டி நோண்டி கொண்டு வந்து அந்த குளத்தின் ஓரத்தில் தான் கொட்டுகிறார்கள். அதுவும் இடிந்து உள்ளே தான் விழுகிறது, இங்கு உள்ளவர்கள் யாரும் அதை கேட்க பயப்படுகிறார்கள். இப்பொழுது இவ்வளவு மக்கள்

9

வந்திருக்கிறார்கள் கேட்பதற்கு தான் வந்திருக்கிறார்கள், பேச தான் வந்திருக்கிறார்கள் எல்லாருக்கும் பேசுவதற்கு மனத்திடம் வரவில்லை என்றார். கொஞ்சம் மனதில் இதனை நினைத்து பாருங்கள் ஒரு நன்மையும் இந்த கிராமத்திற்கு தெரியவில்லை என்றார். 35, 40 வருடங்கள் கூட இருக்கலாம். எத்தனை வருடங்கள் என்று எங்களுக்கு சரியாக தெரியவில்லை. ஆனால், ஒரு நன்மையும் நடந்தது போல தெரியவில்லை. இங்கு நிறைய பேருக்கு உப்பு, சிறுநீரக பாதிப்பு ஏற்படுகிறது. நிறைய ஊர்களில் தண்ணீர் கெட்டுப் போய் உள்ளது. ஆனால், அக்கம் பக்கத்து ஊர்களுக்கு ஒரு ஐந்து கிலோ மீட்டர், ஆறு கிலோமீட்டர் சென்று பார்த்தால் அங்கு எல்லாம் 90 வயது 95 வயதுகளில் நிறைய பேர் நடமாடுகிறார்கள். இங்கு 40, 50 வயதில் எல்லாம் சாகிறார்கள். நிறைய பேர் இன்னும் சிறுநீரக டயாலிசிஸ் செய்து கொண்டிருக்கிறார்கள். மருந்து சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள். யாரும் குணமடையவில்லை. அது எப்படி இந்த சுற்று வட்டாரத்தில், இந்த இரண்டு, மூன்று கிலோ மீட்டருக்குள் உள்ளவர்கள் மட்டும் பாதிப்பு வருகிறது. அது என்னவென்று எதுவும் தெரியவில்லை. அரசு அதிகாரிகள் யாரும் அதை கண்டு கொள்வதில்லை. இங்கு இருக்கிற ஊராட்சி மன்றத் தலைவர், முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் ஒன்றுமே தெரியாதது போல் யாரும் அதைப்பற்றி கேட்பது கிடையாது நன்றி வணக்கம் எனக் கூறி தனது எதிர்ப்பு கருத்தினை பதிவு செய்தார்.

**6. திருமதி. மகாலெட்சுமி, கொப்பம்பட்டி**

எனது பெயர் மகாலட்சுமி கொப்பம்பட்டி. நான் முன்னாள் தலைவரின் மனைவி. நாங்களும் தான் கல்குவாரி நடத்திக் கொண்டிருக்கிறோம். நாங்கள் 10, 15 பேருக்கு வேலை கொடுத்துக் கொண்டுதான் இருக்கிறோம், வேலை கொடுக்காமல் எல்லாம் இல்லை. தற்பொழுது இயந்திரங்கள் வந்திருக்கிறது என்று அவர்கள் கூறும் கருத்து சரி தான். இப்பொழுது சொன்னவர்கள் அனைவருமே சுய உதவிக் குழுவில் பாறை எடுத்துள்ளனர். நாங்கள் எப்படி பிழைப்பது, நாங்கள் பத்து பேருக்கு வேலை கொடுத்து தானே பாறை உடைப்பு செய்கிறோம், அப்பொழுது எங்களுக்கு குவாரி வேண்டும் தான். எங்களுக்கு எந்த விவசாயமும் கிடையாது. இந்த குவாரி தான். இந்த கல் குவாரியை நம்பி தான் இந்த ஊர் இருக்கிறது. இந்த கல்குவாரியை வைத்து தான் பத்து லாரி ஓடுகிறது, கம்பரசர் வண்டி ஓடுகிறது. இங்கு யார் தொழில் செய்யாமல் இருக்கிறார்கள். அனைவரும் தொழில் செய்கிறார்கள் தான். அவர்களுடைய கருத்தினை அவர்கள் சொல்கிறார்கள். எங்களுடைய கருத்தினை நாங்கள் சொல்கிறோம் அவ்வளவுதான் நன்றி என கூறி தனது ஆதரவு கருத்தினை பதிவு செய்தார்.

**7. திருமதி. கவிதா, கொப்பம்பட்டி**

எனது பெயர் கவிதா, கொப்பம்பட்டி. நாங்கள் கல் உடைத்து தான் பிழைக்கின்றோம் எங்களது பிள்ளைகள் அனைவரையும் படிக்க வைக்கிறோம். எங்கள் ஊரில் கோவில் எல்லாம் நிறைய கட்டியுள்ளனர். தேர் எல்லாம் ஓடி இருக்கிறது. கல்குவாரியை வைத்து தான் எல்லாவற்றையும் செய்துள்ளனர். பள்ளிக்கூடத்திற்கு, பிள்ளைகளுக்கெல்லாம் நிறைய செய்துள்ளனர். நாங்கள் வந்து எங்களது பிள்ளைகளை படிக்க வைக்க வேண்டும். எங்களுக்கு கல்குவாரி வேண்டும் கண்டிப்பாக எங்களுக்கு கல்குவாரி வேண்டும் என தனது ஆதரவு கருத்தினை பதிவு செய்தார்.

**8. திருமதி. சின்னாத்தாள், கொப்பம்பட்டி**

எனது பெயர் சின்னாத்தாள், கொப்பம்பட்டி. நாங்கள் பாறை உடைத்து தான் இதுவரைக்கும் பிழைப்பு நடத்தி கொண்டிருந்தோம். நாங்கள் எல்லோரும் கல்குவாரியில் வேலை செய்தோம். பிறகு தான் இயந்திரம் வைத்து உடைத்தார்கள். இப்பொழுது கல்குவாரி வேண்டும் என நாங்கள் கேட்கிறோம், பாறை தான் உடைக்க வேண்டும். நான் கல்குவாரியில் உடைத்தால் தான் பிள்ளைகள் எல்லாரையும் படிக்க வைக்க முடியும். எங்களுக்கு என்று எதுவும் செய்ய முடியும் எனக் கூறி தனது ஆதரவு கருத்தினை பதிவு செய்தார்.

**9. திருமதி. அமுதா, கொப்பம்பட்டி**

எனது பெயர் அமுதா, கொப்பம்பட்டி. எங்களுக்கு கல்குவாரி வேண்டும். நாங்கள் பிள்ளைகள் எல்லாரையும் கல்குவாரியை நம்பி தான் படிக்க வைக்கிறோம், எனது வீட்டுக்காரர் இங்கு வேலை இல்லாத காரணத்தினால் இப்பொழுது வெளியூர் செல்கிறார். எங்களுக்கு இப்பொழுது கல்குவாரி இருந்தால், எனது வீட்டுக்காரர் இப்பொழுது இங்கு தான் வேலை பார்ப்பார். ஆகவே எங்களுக்கு கல்குவாரி வேண்டும் எனக் கூறி ஆதரவு கருத்தினை பதிவு செய்தார்.

**10. திருமதி. பாண்டி மீனா, கொப்பம்பட்டி**

என் பெயர் பாண்டி மீனா கொப்பம்பட்டி. நான் சிறு பிள்ளையாக இருக்கும் பொழுதிலிருந்து எனது அப்பா கல்குவாரியில் பாறையில் தான் வேலை பார்க்கிறார்கள். இப்பொழுது என்னை படிக்க வைத்துள்ளார். இதற்கு பிறகு எனது தம்பிகளை படிக்க வைப்பார்கள். அதனால், கல்குவாரி எங்களுக்கு வேண்டும் என தனது ஆதரவு கருத்தினை பதிவு செய்தார்.

**11. திரு. பாலையா, கொப்பம்பட்டி**

எனது பெயர் பாலையா, கொப்பம்பட்டி, நான் ஓட்டுனராக வேலை செய்கிறேன். கல்குவாரி இயங்கினால் தான் நான் சம்பாரிக்க முடியும். ஜல்லி இருந்தால் தானே வீடு கட்ட முடியும். அரசாங்கம் வீடு கொடுத்தாலும் கூட ஜல்லி இல்லாமல் எப்படி வீடு கட்ட முடியும். நாங்கள் வெளியில் ஜல்லி வாங்க முடியாது. அதனால் நான் கல்குவாரி வேண்டுமென சொல்கிறேன் என்று தனது ஆதரவு கருத்தினை பதிவு செய்தார்.

**12. திரு. முருகேசன், கொப்பம்பட்டி**

என் பெயர் முருகேசன் கொப்பம்பட்டி. கல்குவாரியில் இயந்திரங்கள் இல்லாமல் ஆட்கள் கல் உடைப்பது போல் பழைய மாதிரி வேலை கொடுக்க வேண்டும். இங்கு கருப்பு கோவில் பாதை இல்லாமல் இருக்கிறது, எங்களால் விவசாயம் செய்ய முடியாமல் பாதை தடைப்பட்டு நிற்கிறது. இவற்றையெல்லாம் சரி செய்து தர சொல்லுங்கள். பழைய மாதிரி ஆள் வைத்து கல் உடைப்பது போல எல்லோரும் பிழைப்பது போல வேலை கொடுங்கள். அப்படி செய்தால், இந்த கல்குவாரிக்கு அனுமதி கொடுங்கள் எனக் கூறி தனது கருத்தினை பதிவு செய்தார்.

**13. திரு. அறிவழகன், கொப்பம்பட்டி**

அனைவருக்கும் வணக்கம் எனது பெயர் அறிவழகன், கொப்பம்பட்டி. நடராஜ் என்பவருக்கும் சசிகுமார் என்பவருக்கும் கல்குவாரிக்கு அனுமதி தரலாம் அதில் எந்தவித ஆட்சேபனையும் இல்லை. கல்குவாரிக்கு மனதார அனுமதி தரலாம். அது மட்டும் இல்லாமல், நான் இந்த கல்குவாரியில் ஒரு 13, 15 ஆண்டுகளாக ஒரு கூலி ஆளாக வேலை பார்த்து வந்தேன். எனக்கு இன்று 10, 12 லாரிகள் இருக்கிறது. அந்த பத்து பன்னிரண்டு லாரிகளுக்கும் ஓட்டுனர் அனைவருமே உள்ளூரில் உள்ள ஆட்களை வைத்து தான் பார்த்துக் கொண்டிருக்கிறோம். என்னை நம்பி ஒரு 15 குடும்பம் இருக்கிறது, அவர்களை நம்பி தான் நாங்கள் இருக்கிறோம். எல்லாவிதமான சூழலும் நன்றாக தான் உள்ளது. எந்த கோளாறுகள் எல்லாம் கிடையாது. இங்கிருக்கும் உள்ளூர் கிரஷர் இயங்கினால் தான் நாம் இங்கிருந்து கற்களை கொண்டு செல்ல சௌகரியமாக இருக்கும். நாம் இங்கு கல்குவாரி வைத்துக் கொண்டு, கிரஷர் வைத்துக் கொண்டு இங்கு பயனடையாமல் போய் புதுக்கோட்டையிலையோ, விராலிமலையிலையோ சென்றோம் என்றால் தூரம் தான் போகும். அதனால் கல்குவாரி இயக்க எனக்கு எந்தவிதமான ஆட்சேபனையும் இல்லை. இரண்டு நபர்களுக்கும் மனதார கல்குவாரி அமைக்க அனுமதி தரலாம் என்று

அன்போடு கேட்டுக் கொண்டு விடைபெறுகிறேன் நன்றி எனக்கூறி தனது ஆதரவு கருத்தினை பதிவு செய்தார்.

**14. திரு. கோவிந்தசாமி, கொப்பம்பட்டி**

எனது பெயர் கோவிந்தசாமி, கொப்பம்பட்டி. இங்கு கல்குவாரி அமைப்பதற்காக எந்தவித ஆட்சேபனையும் எனக்கு இல்லை. இங்கு கல்குவாரி செயல்பட்டால் பல பேர் வேலை பார்ப்பார்கள், பொதுமக்கள் வளர்ச்சி அடைவார்கள். கிராமமும் நன்றாக வளர்ச்சி அடையும் என கூறி தனது ஆதரவு கருத்தினை பதிவு செய்தார்.

**15. திரு. பிரபு, பூச்சிக்குடி வயல்**

என்னுடைய பெயர் பிரபு, பூச்சிக்குடிவயல். நான் ஒரு ஜேசிபி ஆப்ரேட்டர். என்னுடன் சேர்த்து ஒரு இருபது, முப்பது நபர்கள் ஜேசிபி, ஹிட்டாச்சி எல்லாம் இயக்கிக் கொண்டிருக்கிறார்கள் அதேபோல இங்கு கொப்பம்பட்டி மற்றும் பக்கத்து ஊர்களில் இருந்தெல்லாம் வந்து இங்கு கிரஷரில் வேலை பார்க்கிறார்கள். ஒரு 50, 100 நபர்கள் வேலை பார்க்கிறார்கள். அவர்களுக்கு எல்லாம் இங்கு கல்குவாரி வந்தால் தான் வேலை பார்க்க முடியும். எங்களுக்கு கல்குவாரி விரைவாக அனுமதி வழங்க வேண்டும் நன்றி வணக்கம் எனக் கூறி தனது ஆதரவு கருத்தினை பதிவு செய்தார்.

**16. திரு. பிரபாகரன், கொப்பம்பட்டி**

என் பெயர் பிரபாகரன், கொப்பம்பட்டி. நான் ஒரு கிரஷரில் மேனேஜராக இருக்கிறேன். எனது அப்பா குவாரியில் தான் வேலை பார்த்தார் என்னை படிக்க வைத்தார். நானும் கிரஷரில் தான் வேலை பார்க்கிறேன். எங்கள் ஊரில் அதிகப்படியாக கல்குவாரியை வைத்துத்தான் எல்லோரும் பிழைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகையால் எங்களுக்கு இங்கு கல்குவாரி வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன் என்று கூறி தனது ஆதரவு கருத்தினை பதிவு செய்தார்.

**17. திரு. வீரக்குமார், கொப்பம்பட்டி**

எனது பெயர் வீரக்குமார் கொப்பம்பட்டி நான் ஒரு கிரஷரில் ஆப்ரேட்டராக இருக்கிறேன். தற்பொழுது இந்த கல்குவாரியை இயக்காமல் நிறுத்தி வைத்திருப்பதால் இரண்டு வருடங்களாக எந்தவித வேலையுமே இல்லை. நாங்கள் வட்டிக்கு பணம் வாங்கி செலவு செய்து கொண்டிருக்கும் நிலைமை இருக்கிறது. எங்களுக்கு இந்த கல்குவாரியை அனுமதித்தால் தான், நான் எனது குடும்பத்தை நடத்தலாம். என்னிடம் ஒரு ரூபாய் காசு கூட இல்லை. எங்களுக்கு கண்டிப்பாக கல்குவாரி வேண்டும். கல்குவாரியிலிருந்து எல்லோரும் நன்றாக தான் சம்பாரித்துக் கொண்டு இருக்கிறார்கள்.

நன்றாக தான் போய்க் கொண்டிருக்கிறது. எங்களுக்கு கண்டிப்பாக கல்குவாரி வேண்டும். கல்குவாரி இருந்தால் தான் நான் என் குடும்பத்தை நடத்தலாம் எனக் கூறி தனது ஆதரவு கருத்தினை பதிவு செய்தார்.

**18. திரு. காமராஜ், கொப்பம்பட்டி**

இந்த ஊரில் 35 ஆண்டுகளாக கல்குவாரிகள் எல்லாம் நல்லபடியாக இயங்கி கொண்டுதான் இருந்தது. இப்பொழுது ஒரு நான்கைந்து ஆண்டுகளாக கல்குவாரி சரியாக இயங்காததால் சற்று குறைவாக தான் இருக்கிறது. 25 ஆண்டுகளுக்கு முன்பெல்லாம் கொப்பம்பட்டியை சின்ன கண்டி சிங்கப்பூர் என்று தான் சொல்லுவார்கள். அந்த அளவுக்கு அனைத்து மக்களிடமும் வேலைவாய்ப்பு இருக்கும். அவர்கள் ஜல்லி ஏற்ற போவது, இறக்க போவது, இது போல கல் உடைப்பது இவற்றையெல்லாம் மக்களே பார்த்தார்கள். என்னுடைய கருத்து என்னவென்றால் இங்கு பாறை முழுவதுமாக உடைப்பதற்கு இயந்திரங்களின் பணிகளை கொஞ்சம் குறைத்து, மக்களுக்கு நேரடியாக பாறை உடைக்கும் பணிகளை அதிகமாக கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். எனவே, கல்குவாரி இயக்குவதற்கு எனக்கு எந்தவித ஆட்சேபனையும் கிடையாது எனக் கூறி தனது ஆதரவு கருத்தினை பதிவு செய்தார்.

**வருவாய் கோட்டாட்சியர், இலுப்பூர்:**

அதற்கு பின்பு வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் பொதுமக்கள் யாரேனும் கருத்து சொல்வதாக இருந்தால் தெரிவிக்கலாம் என்று கூறினார். பின்பு பொதுமக்கள் யாரும் கருத்து தெரிவிக்க முன்வராததால் கூட்டத்தினை முடித்து வைப்பதாக தெரிவித்தார்.

**நன்றியுரை:**

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்கள் பொதுமக்கள் தங்கள் கருத்துக்களை எழுத்துவடிவில், மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்திலோ அல்லது தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் புதுக்கோட்டை அலுவலகத்திலோ சமர்பிக்கலாம் என்று தெரிவித்துக் கொண்டார். தி/ள். கி. நடராஜ் உடைக்கல் மற்றும் கிராவல் குவாரி பொதுமக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டத்திற்கு தலைமை ஏற்று நடத்திய வருவாய் கோட்டாட்சியர், இலுப்பூர் அவர்களுக்கு நன்றி கூறினார். இதர வருவாய் துறை அதிகாரிகள், கல்குவாரி நிறுவன உரிமையாளர்கள், திட்ட பிரதிநிதிகள், பணியாளர்கள், சமூக ஆர்வலர்கள், காவல்துறை அதிகாரிகள், பத்திரிக்கை நிருபர்கள்

மற்றும் கலந்து கொண்ட பொதுமக்கள் அனைவருக்கும் நன்றியினை மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் தெரிவித்துக் கொண்டார்.

கூட்டம் இனிதே நிறைவுற்றது.

**இணைப்பு:**

1. கருத்துக் கேட்புக் கூட்டத்தில் கலந்துகொண்டவர்களின் வருகை பதிவேடு (அ).
2. திட்ட பிரதிநிதிகளின் நிழற்பட விளக்க உரை (ஆ)
3. கருத்துக் கேட்புக் கூட்ட நடவடிக்கைகளைப் பதிவு செய்த வீடியோ குறுந்தகடுகள் (இ).
4. சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு வரைவு விரிவான அறிக்கை மற்றும் தமிழ், ஆங்கிலத்தில் திட்ட சுருக்க உரைகள் (ஈ).
5. எழுத்து வடிவில் பெறப்பட்ட பொதுமக்களின் கருத்துக்கள் (உ) - 14 எண்ணிக்கை

8/1/25

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
புதுக்கோட்டை.

வருவாய் கோட்டாட்சியர்,
இலுப்பூர்